# தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்

(திருத்தப்பட்ட கணிதக் கூறு)

## பாடத்திட்டம்

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தரம்)

## தரம் 12,13

தொழினுட்பக் கல்வித் துறை
விஞ்ஞான, தொழினுட்பப் பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
இலங்கை
www.nie.lk

தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்

தரம் 12,13

பாடத்திட்டம்

முதற் பதிப்பு- 2013

© - தேசிய கல்வி நிறுவகம்

பதிப்பு : அச்சகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம
இணையத்தள முகவரி - www.nie.lk
தொலைபேசி - 011 - 7 601601

# கௌரவ கல்வி அமைச்சரின் ஆசிச்செய்தி

இலங்கையின் எதிர்காலத்திற்காக அறிமுகப்படுத்தப்பட்ட “**மஹிந்த சிந்தனை**” யில், ஆகாய, வர்த்தக, சக்தி மற்றும் அறிவின் கேந்திர ஸ்தானமாகவும் தொழினுட்ப ரீதியாக மனித வளத்தை விருத்தி செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது க.பொ.த. உயர்தர வகுப்புக்களில் கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம் என்ற துறைகளில் கல்வி வழங்கப்பட்டு வருகிறது. ஆயினும், அதிக எண்ணிக்கையான மாணவர்கள் கலைத்துறையைத் தெரிவு செய்து கற்பதனால் நாட்டின் தேவைக்கும் உற்பத்திக்கும் இடையில் ஒரு பொருத்தமற்ற தன்மை ஏற்படுகிறது. வருடாந்த பல்கலைக்கழக உள்வாங்கலில் கலைத்துறையின் ஆதிக்கமே அதிகமாகக் காணப்படுகிறது. இத்தகைய நடவடிக்கையானது நாம் எதிர்பார்க்கும் தொழினுட்பம் சார்ந்த தொழில்விருத்திக்குப் பாரிய தடையாக இருப்பது இனங்காணப்பட்டுள்ளதுடன் படிப்படியாக நாட்டின் அபிவிருத்திக்கும் தடையாக மாறுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

மேற்கூறப்பட்ட நிலைமை உடனடியாக மாற்றப்பட வேண்டும் என்பது அரசாங்கத்தினால் தெளிவாக இனங்காணப்பட்டுள்ளது. அத்துடன் இளைஞர்களின் வேலையின்மை விகிதத்தைக் குறைப்பதற்காக தொழினுட்பத்தையும் பொருத்தமான மென்திறன்களையும் கொண்ட, சவால்களை எதிர்நோக்கக்கூடிய இளைஞர்கள் உருவாக்கப்படவேண்டும். புதிதாக அறிமுகப்படுத்தப்படுகின்ற தொழினுட்பத் துறை இத்தேசத்து மாணவர்களுக்கு புதிய பாதையைத் திறந்து விடுவதுடன் வேலைவாய்ப்புத் திறனை பல்கலைக்கழகங்களின் மூலம் பெற்றுக் கொள்ளவும் பல்கலைக்கழகப் புகுமுகத் தகுதி பெறாதவர்கள் தேசிய தொழிற்துறைத் தகைமைத் தொகுதிக்குள் (NVQ) செல்லவும் வழிசெய்யும்.

இத்தருணத்தில் தமது அரிய நேரத்தைச் செலவிட்டு கலைத்திட்டத்தைக் குறுகிய காலத்திற்குள் தயாரித்துத் தந்த அமைச்சு, நிறுவனங்கள், திணைக்களங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய வளவாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பந்துல குணவர்தன**
கௌரவ கல்வி அமைச்சர்,
கல்வி அமைச்சு,
பத்தரமுல்ல,
இலங்கை.

# உயர் கல்வி அமைச்சரின் ஆசிச்செய்தி

## புதிய தொழினுட்பப் பிரிவை அறிமுகம் செய்தல்

அதிமேதகு ஜனாதிபதியின் தலைமையில் புதிய தொழினுட்பப் பிரிவை, கல்வி, உயர் கல்வி, இளைஞர் விவகாரம், திறன் விருத்தி போன்ற அமைச்சுகள் ஒன்றிணைந்து அங்குரார்ப்பணம் செய்யும் இந்நிகழ்ச்சி, இலங்கையின் கல்வி முறைமையின் வரலாற்றில் தடம் பதிக்கும் ஒரு தருணமாகும்.

இப்புதிய தொழினுட்பப் பிரிவின் மூலம் அறிவுசார், துறைசார் ஆளணியினர் மற்றும் ஆய்வாளர்கள் உருவாகுவார்கள் என்பது எமது எதிர்பார்ப்பாகும். க.பொ.த. உயர்தரம் கற்ற பின்னர் இந்நாட்டின் இளைஞர்கள் முகாமையாளர்களாக, தொழினுட்பவியலாளர்களாக, ஆசிரியர்களாக சமூகத்தில் இணைவார்கள் எனவும் எதிர்பார்க்கிறோம். அத்துடன் பல்கலைக்கழகத்தில் தொழினுட்பப் பட்டப் படிப்பை மேற்கொண்டவர்கள் எமது நாடு ஆசியாவின் ஆச்சரியமாக மாறுவதற்குப் பங்களிப்புச் செய்கின்றனர்.

2016 ஆம் ஆண்டு முதல் அரச பல்கலைக்கழகங்கள் நாற்பது கற்கை நெறிகளுடன் இப்புதிய மாணவர்களை வரவேற்கக் காத்திருக்கின்றேன் என்பதை இத்தருணத்தில் நான் மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறேன்.

இப்புதிய பிரிவின் அறிமுகமானது நிச்சயமாக வெற்றியளிக்கும் என்பது எமது திடமான நம்பிக்கையாகும்.

எஸ். பி. திஸாநாயக்க
கௌரவ உயர் கல்வி அமைச்சர்,
உயர் கல்வி அமைச்சு,
கொழும்பு - 7,
இலங்கை

# கௌரவ இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் அவர்களின் ஆசிச்செய்தி

தொழினுட்பக் கல்வி மற்றும் தொழிற்பயிற்சிப் பாடத்துறையை தற்போது இருக்கின்ற இடத்திலிருந்து உயர் மட்டத்திற்குக் கொண்டு வருவதற்காக வேண்டிய கொள்கைரீதியான தீர்மானங்கள் கடந்த அரசாங்கங்களினால் எடுக்கப்பட்டபோதும் அவை எதிர்பார்த்த இலக்குகளை அடையவில்லை என்பது தெள்ளத் தெளிவான விடயமாகும்.

மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு அமைய இந்த நிலைமைக்கான காரணங்களைத் தேடிய நமக்கு அதற்குரிய காரணம் என்னவென்று தெரிய வந்தது. தற்போது அபிவிருத்தி அடைந்துள்ள ஐரோப்பிய மற்றும் ஆசிய நாடுகளின் வெற்றிக்குக் காரணம் அந்நாடுகளில் தொழினுட்பக் கல்வி மற்றும் தொழிற் பயிற்சித் துறைக்குரிய தொழினுட்ப பாடத்துறையை பல்கலைக்கழகக் கல்விக்கு ஏற்றவகையில் சமாந்தரமான ஒரு கல்வித் துறையாக அபிவிருத்தி செய்தமையும் அந்நாடுகளிலுள்ள தொழினுட்பப் பாடத்துறையை அப்பாடசாலைகளில் காணப்பட்ட பாடங்களுடன் மிக முறையான வகையில் கலந்தமையும் ஆகும்.

இளைஞர் விவகாரங்கள் என்ற விடயத்துடன் திறன்கள் அபிவிருத்தியையும் சேர்த்து ஒரு அமைச்சினை உருவாக்கிய முதல் நாடு இலங்கையே ஆகும். அதிமேதகு சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் இற்றைக்கு இரண்டு வருடங்களுக்கு முன்பு அவ் உயரிய நடவடிக்கையை எடுத்தமை அபிவிருத்தி அடைந்த நவீன இலங்கையை உருவாக்கும் பணியின் அடிப்படையான ஒரு நடவடிக்கையாகும். அதாவது தொழினுட்பப் பாடத்துறையை இலங்கைப் பாடசாலைக் கல்வியின் உயர்தரப் பாடநெறிகளுடன் சேர்த்ததுடன் இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சை உருவாக்கும்போது காணப்பட்ட ஆரம்ப நோக்கங்கள், எதிர்பார்ப்புகள் எல்லாம் வலுப்பெற இருந்த இறுதியான தடையும் இல்லாமற் போயுள்ளதென்பது எனது நம்பிக்கை ஆகும். அதாவது, இதிலிருந்து தொழினுட்பக் கல்வித்துறை மூலம் திறன்கள் அபிவிருத்திக்கு நுழையும் இளைஞர், யுவதிகள் அதற்குரிய அறிவு, திறமை போன்றவற்றுடன் அடிப்படை எண்ணக்கருக்களை பெற்றுக்கொள்வதும் பாடசாலைகள் மூலமே ஆகும். குறிப்பாக பாடசாலைப் பாடநெறிகளுடன் தொழினுட்பப் பாடநெறியைச் சேர்ப்பதன் மூலம் இதைப்பற்றி மாணவ மாணவிகளிடமும் பெற்றோர்களிடமும் உருவாகும் வரவேற்பு மற்றும் நம்பிக்கை காரணமாக அபிவிருத்தியடைந்த நாடுகளில் இடைநிலைக் கல்வியின் இறுதியில் தொழினுட்பப் பாடநெறிக்குக் கிடைத்துள்ள வரவேற்புக்குச் சமமான வரவேற்பு எமது நாட்டிலும் உருவாகும் என்பது எனது நம்பிக்கையாகும்.

குறிப்பாக நாம் வாழ்கின்ற இந்த 21ஆம் நூற்றாண்டு, ஆசியாவின் நூற்றாண்டாடெனப்படுகிறது. இந்நூற்றாண்டு அறிவை கேந்திரமாகக் கொண்ட அறிவை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தை மையமாகக் கொண்டதாகும். ஆகவே, மலரவுள்ள ஆசியாவின் நூற்றாண்டில் போது அறிவார்ந்த பொருளாதாரத்தின் மீது உருவாகும் நவீன அபிவிருத்தியடைந்த இலங்கைக்குத் தேவையான திறமையுள்ள தொழிலாளர்கள் பாடசாலைகளிலேயே உருவாகட்டும் என பிரார்த்திக்கின்றேன்.

**டலஸ் அழகப்பெரும**
கௌரவ இளைஞர் அலுவல்கள் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர்
இளைஞர் அலுவல்கள் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு
நிபுணட்டட பியச.
கொழும்பு - 05

## கல்விக் கண்காணிப்புப் பாராளுமன்ற உறுப்பினரின் ஆசிச்செய்தி

தொழினுட்பப் பாடத் துறையைத் தேசிய கல்வி முறைமைக்கு அறிமுகப்படுத்தும் இந்த நிகழ்ச்சிக்கு ஆசிச்செய்தி வழங்கக் கிடைத்தமையை எனது பெரும் பேறாகக் கருதுகிறேன்.

கோட்பாட்டு அறிவு ரீதியாக மட்டுமன்றி க.பொ.த உயர்தரத்தில் பயிலும் இலங்கை மாணவர்கள் செயன்முறை ரீதியான அறிவைபெற்றுக் கொள்வதில் இத்தொழினுட்பப் பாடத் துறையின் அறிமுகமானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். இத்தொழினுட்பத்துறைக்கான ஆகக் குறைந்த தகைமையானது க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம் உட்பட ஏதேனும் மூன்று பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் ஆகும்.

மேற்படி பாடத் துறையானது மாணவர்களுக்கு வேலையுலகில் நுழைவதற்கான பிரயோக ரீதியான அறிவையும் தொழினுட்பத் தேர்ச்சியையும் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை வழங்கி கோட்பாட்டுப் பின்னணியுடன் கூடிய அடிப்படை விளக்கத்தையும் ஏற்படுத்த உதவும்.

மேலும், இந்தப் பாடப்பிரிவைப் பயிலும் மாணவர்கள் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் உயர் அடைவுகளைப் பெறுவார்களாயின் நிச்சயமாக தேசிய பல்கலைக்கழகங்களில் அனுமதியைப் பெற்றுக் கொள்வார்கள். அதேவேளை பல்கலைக்கழக அனுமதிக்கான தகுதியைப் பெறத் தவறியவர்கள் தேசிய தொழில்சார் தகைமையை (NVQ) தேசிய தொழினுட்ப மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் கீழ் பெற்றுக்கொள்ள முடியும்.

இறுதியாக அனைத்து கல்விமான்களுக்கும் பல்வேறு நிறுவன அதிகாரிகளுக்கும், அமைச்சர்களுக்கும் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கும் மேற்படி தேசிய பணியில் பங்களித்தமைக்காக எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மொஹான்லால் கிறேறு**
கண்காணிப்புப் பாராளுமன்ற உறுப்பினர்,
கல்வி அமைச்சு,
பத்தரமுல்ல
இலங்கை

## கல்வி அமைச்சின் செயலாளரின் ஆசிச்செய்தி

தேசிய கல்வி முறைமையில் புதிய தொழினுட்பத்துறையை அங்குரார்ப்பணம் செய்யும் தருணத்தில் ஆசிச்செய்தியை வழங்கக் கிடைத்தமையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன். எமது பட்டதாரிகளின் மத்தியில் காணப்படும் தேர்ச்சியின்மை அல்லது தேர்ச்சிக் குறைவு தமது தொழிலை சிறப்பாகச் செய்வதற்குத் தடையாக அமைந்துள்ளது. இந்த நிலைமை இலங்கை அரசினதும் தொழிற் சந்தையினதும் கவனத்தை வெகுவாக ஈர்த்துள்ளது.

தொழிற் சந்தையில் அதிகரித்துவரும் கேள்விக்குப் பொருத்தமான தொழிற்றிறனுள்ள இளைஞர்களை உருவாக்கும் பொருட்டு இலங்கை அரசாங்கம் மூன்றாம்நிலைக் கல்வியில் தொழினுட்பத்துறையை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கிணங்க அரசாங்கம் கலைத்துறையைத் தெரிவுசெய்யும் மாணவர்களின் எண்ணிக்கையைப் படிப்படியாகக் குறைப்பதற்குத் திட்ட மிட்டுள்ளதுடன் ஏனைய துறைகளில் மாணவர்களின் எண்ணிக்கையைக் கூட்டுவதற்கும் புதிய தொழினுட்பப் பிரிவுகளை பல்கலைக்கழகங்களிலும் தொழினுட்ப மற்றும் தொழிற் கல்வி நிறுவனங்களிலும் அறிமுகப்படுத்தவுள்ளது. இதன் நோக்கம் வேலையுலகிற்குத் தேவையான தகைமைகளை மாணவர்களுக்கு வழங்குவதாகும்.

மேற்படி உத்தேச தொழினுட்பத்துறையானது க.பொ.த. உயர்தரத்தில் தனியான பிரிவாக அமைவதுடன், அதனுடன் தொடர்புடைய பாடங்களைத் தெரிவு செய்வதன் மூலம் பரந்த தொழினுட்பப் பரப்பைக் கற்பதற்கு இயலுமாகவுமமையும்.

**எஸ். எம். கோட்டாபய ஜயரத்ன**
செயலாளர்,
கல்வி அமைச்சு,
பத்தரமுல்ல.
இலங்கை.

# தேசிய கல்வி நிறுவகப் பணிப்பாளர் நாயகத்தின் ஆசிச்செய்தி

உத்தேச கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தர தொழினுட்பத் துறையானது இலங்கையின் பொதுக் கல்வி முறைமையில் ஏற்பட்ட ஒரு திருப்புமுனையாகும். ஏனெனில், இது விஞ்ஞான மற்றும் தொழினுட்பக் கற்கைகளுக்கு அதிக வாய்ப்பை வழங்குவதன் மூலம் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு கலைத்துறையைத் தெரிவு செய்யும் மாணவர்களின் எண்ணிக்கையைப் பெருமளவுக்குக் குறைத்து தற்போது காணப்படும் கட்டமைப்பின் சமனிலையின்மையை நீக்குகிறது.

தொழினுட்பக் கல்வியை அறிமுகப்படுத்துவதன் முக்கியத்துவத்தை ஐக்கிய நாடுகளின் கல்வி, சமூக மற்றும் பண்பாட்டு அமையம் (UNESCO) மற்றும் சர்வதேச தொழிலாளர் அமையம் (ILO) வின் 2002 ஆம் ஆண்டு விதப்புரை இனங்கண்டுள்ளது. தொழினுட்பக் கல்வியின் அறிமுகமானது வேலையுலகிற்கும் தொழினுட்ப உலகிற்கும் அறிமுகத்தைத் தருவதுடன் கல்விப்புலத்தையும் விரிவுபடுத்தும். இதன் விளைவானது கற்றல் சாதனங்கள், கருவிகள், உத்திகள் மற்றும் உற்பத்திப் படிமுறைகள், பகிர்வு, முழுமையான முகாமைத்துவம் என்பவற்றைத் தேடியாய்வதாக அமைவதோடு செயன்முறை அனுபவங்கள் மூலமாகக் கற்றல் செயல்முறைகளை வளப்படுத்துகிறது.

உலகளாவிய ரீதியில் பல நாடுகள் தொழினுட்பத் துறையினை சிரேஷ்ட இடைநிலைக் கல்வியில் அறிமுகப்படுத்தி உள்ளதுடன் அதன் நன்மைகளை தமது நாட்டின் பொருளாதார விருத்திக்கும் பயன்படுத்தியுள்ளன. இந்த புதிய தொழினுட்பத் துறையானது மாணவர்களுக்கு பொறியியல் தொழினுட்பவியல், உயிரியல் முறைமைகள் தொழினுட்பவியல், தொழினுட்பத்திற்கான விஞ்ஞானம் போன்ற பிரதான பாடப்பரப்புகளை கற்பதற்கு சந்தர்ப்பத்தை வழங்கும். அத்துடன் தேசிய தொழிற்றுறைகளுக்கான தகைமையையும் பெற்றுக்கொள்ள மாணவர்களுக்கு சந்தர்ப்பத்தை வழங்குவதுடன் உயர்தரப் பரீட்சையின் பின்னர் வேலையுலகிற்கு இலகுவாகப் பிரவேசிக்கவும் வழிசெய்யும்.

அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் மற்றும் கல்வி, உயர்கல்வி, தொழிற்பயிற்சி மற்றும் திறன் விருத்தி போன்ற அமைச்சுக்களின் அமைச்சர்கள் புதிய தொழினுட்பத் துறையை அறிமுகஞ் செய்வதன் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ளதையும் இலங்கையின் கல்வி முறைமைக்கு அதனை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தமையையும் வெகுவாகப் பாராட்டுகிறேன்.

அமைச்சுகளின் செயலாளர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், பல்கலைக்கழகங்களின் உபவேந்தர்கள் மற்றும் கலைத்திட்ட அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் ஆகியோரின் பெறுமதிமிக்க சேவையை புதிய தொழினுட்பத் துறையின் அறிமுகத்திற்காக தேசிய கல்வி நிறுவகத்திற்கு வழங்கியமைக்கு நன்றி கூறுகிறேன்.

**பேராசிரியர் டபிள்யூ. எம். அபேரத்ன பண்டார**
பணிப்பாளர் நாயகம்,
தேசிய கல்வி நிறுவகம்,
மகரகம.
இலங்கை,

## 1.0 அறிமுகம்

தொழினுட்பக் கல்வியை அறிமுகப்படுத்துவதன் முக்கியத்துவத்தை ஐக்கிய நாடுகளின் கல்வி, சமூக மற்றும் பண்பாட்டு அமையம் (UNESCO) மற்றும் சர்வதேச தொழிலாளர் அமையத்தின் (ILO) 2002ஆம் ஆண்டின் விதப்புரை ஆகியன இனங்கண்டுள்ளது. தொழினுட்பக் கல்வியின் அறிமுகமானது வேலையுலகிற்கும் தொழினுட்ப உலகிற்கும் அறிமுகத்தைத் தருவதுடன் கல்விப்புலத்தையும் விரிவுபடுத்தும். இதன் விளைவானது கற்றல் சாதனங்கள், கருவிகள், உத்திகள் மற்றும் உற்பத்திப் படிமுறைகள், பகிர்வு, முழுமையான முகாமைத்துவம் என்பவற்றை தேடியாய்வதாக அமைவதோடு செயன்முறை அனுபவங்கள் மூலமாகக் கற்றல் செயன்முறைகளைப் பெறுமதிமிக்கதாக்குகிறது.

சிரேட்ட இடைநிலைக் கல்வியில் தொழினுட்பத்துறையை அறிமுகப்படுத்துதல் பல நாடுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆசியப் பிராந்தியத்தில் அபிவிருத்தியடைந்துவரும் மலேசியாவின் அனுபவம் இதனைச் சிறப்பான முறையில் எடுத்துக்காட்டுகிறது. இலங்கையில் க.பொ.த(சாதாரண தரத்தில்) எல்லா மாணவர்களுக்கும் அளிக்கப்படும் தொழில்சார் பாடங்களின் தொகுதியானது உலகளாவிய பணிக்கும், உலகளாவிய தொழில்னுட்பத்திற்கும் ஒரு ஆரம்பப் படியாக இருப்பினும், மேலதிகமாக தொழினுட்பரீதியாக முனைப்புற்ற கல்விக்கு அதாவது மூன்றாம்நிலைக் கல்வியைக் கற்பதற்கோ, பொருத்தமான தொழில்வாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்கோ போதுமான வாய்ப்புக்களை அவர்களுக்கு வழங்கவில்லை.

இலங்கையின் பொதுக்கல்வியின் ஒரு மைல்கல்லான, தற்போது பிரேரிக்கப்பட்டுள்ள உயர்தர தொழினுட்பத்துறையை அடையாளங் காணமுடியும். ஏனெனில், இது உயர்தரத்தில் கலைத்துறையைத் தெரிவுசெய்யும் மாணர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும். அத்துடன் தொழினுட்பம் மற்றும் விஞ்ஞானத்துறை மாணவர்களின் எண்ணிக்கையை 2016ஆம் ஆண்டளவில் சுமார் 40%தினால் அதிகரிக்கும். அவ்வாறான தொழில்நுட்பத்திறன் கொண்ட மாணவர்கள் பட்டதாரிகளாகும்போது, நாட்டின் பொருளாதார மற்றும் சமூகம் சார்ந்த அபிவிருத்திக்கு அவர்களால் ஆக்கத்திறனுடன் வினைத்திறன்மிக்க பங்களிப்பை வழங்க முடியும்.

பிரேரிக்கப்பட்டுள்ள தொழினுட்பத்துறையானது, உயர்தர வகுப்பில் ஒரு தனியான பிரிவாக, தெளிவான வகையில் அடையாளங் காணப்படும். அது, தேவையான பாடநெறிகளுடன் கூடிய பரந்த தொழில்னுட்பக் கற்கைப் பரப்பினை உள்ளடக்கியுள்ளது. கல்வியமைச்சிலும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிலும், தேசிய கல்வி நிறுவகத்திலும் நடைபெற்ற கலந்துரையாடல்களின் பேறாக, ‘‘பொறியியல் தொழினுட்பவியல்’’ மற்றும் ‘‘உயிரியல் முறைமைகள் தொழினுட்பவியல்’’ எனும் இரண்டு பரந்த தொழினுட்பப் பரப்புகள் இனங்காணப்பட்டது. இவை இரண்டிலும் ஏதாவதொரு பாடத்தை மாணவர்கள் தெரிவு செய்யலாம். இந்தச் சேர்மானத்தில் இரண்டாவது பாடமான ‘‘தொழினுட்பத்திற்கான விஞ்ஞானம்’’ என்பது விஞ்ஞானம். கணிதம் மற்றும் தகவற் தொழினுட்பம் ஆகியன தொடர்பான அடிப்படை அறிவை வழங்கி, தெரிவுசெய்த தொழினுட்பப் பாடநெறியைக் கற்க உதவியாக அமையும். இச்சேர்மானத்தின் மூன்றாவது பாடம், ஏற்கனவே க.பொ.த உயர்தரத்திற்கான பாடங்களின் தொகுதியிலிருந்து தெரிவு செய்யப்படும்.

**தொழினுட்பக் கற்கைத் துறையில் அடங்கும் பாடங்கள் வருமாறு**

1. பொறியியற் தொழினுட்பவியல் / உயிரியல்முறைமைகள் தொழினுட்பவியல் (ஏதாவதொன்று)
2. தொழினுட்பவியலிற்கான விஞ்ஞானம்
3. பின்வரும் பாடங்களில் ஒன்று

- பொருளியல்
- புவியியல்
- மனைப் பொருளியல்
- ஆங்கிலம்
- தொடர்பாடல் மற்றும் ஊடகக் கற்கை
- தகவல் மற்றும் தொடர்பாடற் தொழினுட்பவியல்
- சித்திரம்
- வணிகக் கல்வி
- விவசாய விஞ்ஞானம்
- கணக்கியல்

**நோக்கங்கள்**

- நாளாந்த வாழ்விற்குப் பயன்படத்தக்க வகையில் மாணவர்களை தொழினுட்பத் திறன்கள் கொண்டோராக ஆயத்தம் செய்தல்
- பிரச்சினைகளுக்குத் தொழினுட்பரீதியான தீர்வுகளை விருத்தி செய்வதற்கான திறன்களை மேம்படுத்துதல்
- மேலதிக தொழிற்றகைமையை வழங்குதல்.
- NVQ சட்டகத்தின் அடிப்படையில் மாணவர்களை அவர்களின் தொழில்சார் கல்வியைத் தொடர இயலுமானவர்களாக்குதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

**கணிப்பீடு**

பாடசாலை மட்டக் கணிப்பீடு, பாடசாலைகளிலேயே நடாத்தப்படும். அதற்கான அறிவுறுத்தல்களும் வழிகாட்டல்களும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் வழங்கப்படும்.

**மதிப்பீடு**

கணிப்பீடானது பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும். ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டியில் மாதிரி வினாத்தாள்கள் பிரசுரிக்கப்படும். எவ்வாறேனும் அறிமுறைப் பரீட்சைக்காக 75% புள்ளிகளும், செய்முறைப் பரீட்சைக்காக 25% புள்ளிகளும் வழங்கப்படும்.

**தொழினுட்பக் கல்வித் துறை**
**தேசிய கல்வி நிறுவகம்**
**மகரகம**

## 02. தேசிய பொது இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது, தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகாலக் கல்வி அமைப்புக்களிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக, நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத்திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக்கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

I. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருக்கள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

II. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு, தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

III. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

IV. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்

V. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்கச் சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

VI. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தி.

VII. தனிநபர்களின் மாற்றத்திற்கேற்ப, இணங்கி வாழவும் மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

VIII. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு, சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக்கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

## 3.0 அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

### I. தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

| | |
|---|---|
| எழுத்தறிவு: | கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும் செம்மையாகவும் எழுதுதல், பயன்தரும் வகையிலான கருத்துப் பரிமாற்றம் |
| எண்ணறிவு: | பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல் |
| சித்திர அறிவு: | கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல். விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றை கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும் |
| தகவல் தொழினுட்பத் தகைமை: | கணினி அறிவு - கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல் |

### II. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டுபிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத் தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்.
- மன எழுச்சிகள், நுண்ணறிவு.

### III. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன - சமூகம், உயிரியல், பௌதிகம்

| | |
|---|---|
| சமூகச் சூழல்: | தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும் |
| உயிரியல் சூழல்: | வாழும் உலகு, மக்கள், உயிரியல் சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும் வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன. |

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வும் நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும் வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

## IV. வேலை உலகத்திற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்.

மாணவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.

- பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்.
- அவர்களது தொழில் விருப்புக்களையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்.
- அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்.
- பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்.

## V. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்.

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும் நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்

## VI. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்.

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் போன்ற மனித அனுபவங்கள்

## VII. “கற்றலுக்குக் கற்றல்” தொடர்பான தேர்ச்சிகள்.

விரைவாக மாறுகின்ற, சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறையூடாக, மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை - 2003 டிசெம்பர்)

# பொருளடக்கம்

**தரம் 12** **பக்கம்**

01. நுண்ணங்கியியல் 01
02. உயிர்மூலக்கூறுகளின் முக்கியத்துவம் 02
03. அடிப்படை கணிதம் 05
04. பைதகரசின் தொடர்புகள் 05
05. அளவீட்டு நுட்பமுறைகள் 06
06. வெப்ப இரசாயனவியல் 06
07. கணினி 08
08. கணினிப் பணிசெயலமுறைமைகள் 09
09. திரிகோண கணிதம் 11
10. வெப்பவியல் 12
11. இயக்க இரசாயனவியல் 13
12. பல்பகுதியங்கள் 15
13. கணினி மென்பொருட் பயன்பாடு 16
14. இணையமும் தொடர்பாடலும் 23
15. விசை 24

**தரம் 13**

16. பொறிமுறைச் சக்தி 26
17. நீர்நிலையியல் 26
18. இயற்கை உற்பத்திப்பொருட்கள் 27
19. ஆள்கூற்றுக் கேத்திரகணிதம் 28
20. சடப்பொருட்களின் பொறிமுறை இயல்புகள் 29
21. மின்னியலும் காந்தவியலும் 29
22. இரசாயனக் கைத்தொழில்கள் 31
23. இயக்கவியல் 32
24. நனோ தொழினுட்பம் 33
25. புள்ளிவிவரவியல் 33
26. தொழினுட்ப முன்னேற்றமும் சூழலும் 35

## தரம் 12

| தேர்ச்சி | Nதர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 1.0 நுண்ணங்கிகளை இனங்கண்டு அவற்றின் பிரயோகங்களை விளக்குவார். | 1.1 நுண்ணங்கிகளின் தன்மை மற்றும் பல்வகைமை ஆகியவற்றை ஆய்ந்தறிவார். | • பிரதான நுண்ணங்கிக் கூட்டங்கள்<br>  • பற்றீரியா<br>  • பங்கசு<br>  • புரட்டோசோவா<br>  • தனிக்கல அல்காக்கள்<br>  • இழையுருப்பங்கசு<br>  • வைரசு | • நுண்ணங்கிகளைப் பிரதான கூட்டங்களாக வகைப்படுத்துவார்.<br>• நுண்ணங்கிக் கூட்டங்களுக்கான உதாரணங்களைக் குறிப்பிடுவார்.<br>• வரிப்படங்களின் உதவியுடன் பிரதான நுண்ணங்கிக் கூட்டங்களுக்குரிய இயல்புகளை விவரிப்பார். | 12 |
| | 1.2 மனித வர்க்கத்தின் நல்வாழ்வுக்காக நுண்ணுயிரியலின் பிரயோகங்களை ஆய்ந்தறிவார். | • நுண்ணுயிரினவியல்<br>  • அறிமுகம்<br>  • பிரயோகங்கள்<br>    • உணவு மற்றும் விவசாயத்துறை<br>    • மருத்துவத் துறை<br>    • உயிரியல் பரிகரிப்பு (Biological treatment)<br>    • கழிவுநீர்ப் பரிகரிப்பு<br>    • உயிரியற் பல்பகுதியங்கள்<br>    • பரம்பரையலகுப் (மரபணுப்) பொறியியல் தொழினுட்பம்<br>    • சக்தியும் நுண்ணங்கிகளும் | • பல்வேறு துறைகளில் நுண்ணுயிரினவியலின் பிரயோகங்களை விவரிப்பார்.<br>• உயிரியற் சிகிச்சைச் செயன்முறையை விவரிப்பார்.<br>• சக்திமூலங்களின் நிலைபேறான பாவனைக்கு நுண்ணுயிர்களின் பிரயோகத்தை விளக்குவார்.<br>• பரம்பரையலகுப் (மரபணுப்) பொறியியலில் நுண்ணங்கிகளின் பிரயோகங்களை விவரிப்பார். | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 2.0 உயிர் மூலக்கூறுகளின் கட்டமைப்பு, முக்கியத்துவம், பயன்பாடு ஆகியவற்றை ஆய்ந்தறிவார். | 2.1 காபோவைதரேற்றின் கட்டமைப்பை ஆய்ந்தறிவார். | • உயிர்மூலக்கூறுகள் - அறிமுகம்<br>• காபோவைதரேற்று<br>  • ஒரு சக்கரைட்டு (மொனோ சக்கரைட்டு)<br>  • இரு சக்கரைட்டு (டைசக்கரைட்டு)<br>  • பல் சக்கரைட்டு (பொலிசக்கரைட்டு) | • உயிர் இரசாயனவியலை அறிமுகஞ் செய்வார்.<br>• உயிர்மூலக்கூறு என்றால் என்னவென விவரிப்பார்.<br>• காபோவைதரேற்றை அறிமுகஞ் செய்து மொனோசக்கரைட்டு, டைசக்கரைட்டு, பொலி சக்கரைட்டு என வகைப்படுத்துவார்.<br>• மொனோசக்கரைட்டு, டைசக்கரைட்டு, பொலி சக்கரைட்டு ஆகியவற்றுக்கான உதாரணங்களைக் குறிப்பிடுவார்.<br>• காபோவைதரேற்றுக்களின் ஆக்கக்கூறு மூலகங்களைப் பெயரிடுவார்.<br>• பொலி சக்கரைட்டுக்களில் அடங்கியுள்ள விசேட கூட்டங்கள், பிணைப்புகள் ஆகியவற்றைப் பெயரிடுவார்.<br>• தரப்பட்ட உயிர் மூலக்கூறுகளில் பொலிசக்கரைட்டு மூலக்கூறுகளை இனங்காண்பார்.<br>• எளிய வெல்லத்தையும் மாப்பொருளையும் இனங்காணும் சோதனைகளை மேற்கொள்வார்.<br>• காபோவைதரேற்றுக்களின் சிறப்பியல்புகளை விவரிப்பார். | 04 |

| தேர்ச்சி | Nதர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 2.2 புரதங்களின் கட்டமைப்பை ஆய்ந்தறிவார். | • புரதங்கள்<br>• அமினோ அமிலங்கள்<br>• புரதங்களும் அவற்றின் கட்டமைப்பு மட்டங்களும்<br>• நொதியங்கள் | • அமினோவமில மூலக்கூறின் அடங்கியுள்ள பிரதான தொழிற்பாட்டுக் கூட்டச் சோடியை இனங்காண்பார்.<br>• புரதத்தின் ஆக்க மூலகங்களைப் பெயரிடுவார்.<br>• புரதத்தில் அடங்கியுள்ள விசேட கூட்டங்கள், பிணைப்புகள் ஆகியவற்றைப் பெயரிடுவார்.<br>• தரப்பட்ட உயிரியல் மூலக்கூறுகளில் புரத மூலக்கூறுகளை இனங்காண்பார்.<br>• புரதத்தின் முதலான கட்டமைப்பு, துணையான கட்டமைப்பு ஆகியவற்றை விபரிப்பார்.<br>• நொதியங்களை அறிமுகஞ் செய்வார். | 04 |
| | 2.3 இலிப்பிட்டுகளின் கட்டமைப்பை ஆய்ந்தறிவார். | • இலிப்பிட்டுகள்<br>• இலிப்பிட்டுகளின் கட்டமைப்பும் கூறுகளும்<br>• இருக்கை<br>• கொழுப்புகளும் எண்ணெய்களும் | • இலிப்பிட்டை அறிமுகஞ் செய்வார்.<br>• இலிப்பிட்டில் அடங்கியுள்ள ஆக்கக்கூறு மூலகங்களைப் பெயரிடுவார்.<br>• இலிப்பிட்டுகளில் அடங்கியுள்ள பிரதான கூட்டங்கள் மற்றும் பிணைப்புக்களைப் பெயரிடுவார்.<br>• இலிப்பிட்டு மூலக்கூறு உருவாகியுள்ள விதத்தை விவரிப்பார்.<br>• தரப்பட்ட உயிர் மூலக்கூறுகளுள் இலிப்பிட்டு மூலக்கூறுகளை இனங்காண்பார்.<br>• இலிப்பிட்டுக்கள் மூலம் உயிரிகளின் உடலில் நிகழ்த்தப்படும் தொழில்களைக் குறிப்பிடுவார்.<br>• எளிய சோதனைகள் மூலம் இலிப்பிட்டை இனங்காண்பார். | 03 |

| தேர்ச்சி | Nதர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 2.4 உயிர் மூலக்கூறுகளின் முக்கியத்துவம் மற்றும் பயன்களை ஆய்ந்தறிவார். | • காபோவைதரேற்றின் முக்கியத்துவம்<br>  • உயிர்முறைமைகளில்<br>  • கைத்தொழில்களில்<br>• புரதங்களின் முக்கியத்துவம்<br>  • உயிர்முறைமைகளில்<br>  • கைத்தொழில்களில்<br>• இலிப்பிட்டின் முக்கியத்துவம்<br>  • உயிர்முறைமைகளில்<br>  • கைத்தொழில்களில்<br>• தொதியங்களின் முக்கியத்துவங்கள்<br>  • உயிர்முறைமைகளில்<br>  • கைத்தொழில்களில்<br>• உயிர்முறைமைகளில் விற்றமின்களின் முக்கியத்துவங்கள் | • காபோவைதரேற்று, புரதம், இலிப்பிட்டு, நொதியங்கள், விற்றமின் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை விவரிப்பார்.<br>• நொதியங்களின் சிறப்பியல்பாக ஊக்கல் தொழிற்பாட்டை விவரிப்பார்.<br>• நொதியங்களின் தொழிற்பாட்டில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை பட்டியற்படுத்துவார்.<br>• கைத்தொழில்களில் பயன்படுத்தப்படும் நொதியங்களைப் பெயரிடுவார்.<br>• கைத்தொழிற்றுறையில் நொதியப் பயன்பாடின் அனுகூலங்களை விவரிப்பார்.<br>• விற்றமின்களின் முக்கியத்துவத்தை குறிப்பிடுவார். | 04 |

| தேர்ச்சி | Nதர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 3.0 பரப்பு, கனவளவு பற்றி ஆய்ந்தறிந்து மட்டுப்படுத்தப்பட்ட இடப்பரப்பை சிறப்பு மட்டத்தில் பயன்படுத்-துவார். | 3.1 கேத்திர கணித தள வடிவங்கள் மற்றும் திண்மங்களின் மேற்பரப்புகளின் பரப்பளவுகளை ஆராய்வார் | • கேத்திரகணித தளவடிவங்களின் பரப்பளவு<br>• திண்மங்களின் மேற்பரப்பின் பரப்பளவு (உருளை, சதுரமுகி, கனவுரு, கோளம், கூம்பகம், அரியம், கூம்பு - சூத்திரங்களைப் பயன்படுத்தி)<br>• கூட்டுத் திண்மவுருக்களின் மேற்பரப்பின் பரப்பளவு | • கேத்திரகணித தளவடிவங்களில் மேற்பரப்பின் பரப்பளவைக் காண்பார்.<br>• திண்மங்களின் மேற்பரப்பின் பரப்பளவைக் காண்பார்.<br>• கூட்டுத் திண்மங்களின் மேற்பரப்பின் பரப்பளவைக் காண்பார்.<br>• கூட்டு திண்மங்களின் மேற்பரப்பு பரப்பளவு தொடர்பான பிரசினங்களைத் தீர்ப்பார். | 06 |
| | 3.2 திண்மங்களின் கனவளவை ஆய்ந்தறிவார். | • திண்மங்களின் கனவளவு (உருளை, சதுரமுகி, கனவுரு, கோளம், நான்முகி, கூம்பு, அரியம் - சூத்திரங்களைப் பயன்படுத்தி)<br>• கூட்டுத் திண்மங்களின் கனவளவு | • தரப்பட்ட திண்மங்களில் கனவளவைத் துணிவார்.<br>• கூட்டு திண்மங்களின் கனவளவைத் துணிவார்.<br>• கூட்டு திண்மங்களின் கனவளவு தொடர்பான பிரசினங்களைத் தீர்ப்பார். | 06 |
| 4.0 பைதகரசின் தொடர்பைப் பயன்படுத்தி இலகுவாகப் பிரசினங்களைத் தீர்ப்பார். | 4.1 செங்கோண முக்கோணியின் பக்கங்களுக்கிடையிலான தொடர்பை ஆராய்வார். | • பைதகரசின் தொடர்பும் அதன் பிரயோகமும் | • பைதகரசின் தொடர்பைப் பயன்படுத்தி முக்கோணியின் பக்கங்களின் நீளங்களைக் கணிப்பார்.<br>• பிரசினங்களைத் தீர்ப்பதற்கு பைதகரசின் தொடர்பைப் பயன்படுத்துவார்.<br>• பைதகரசின் தொடர்பின் மாறுநிலையை எடுத்துரைப்பார்.<br>• பிரசினங்களைத் தீர்ப்பதற்கு பைதகரசின் தொடர்பின் மாறுநிலையைப் பயன்படுத்துவார். | 04 |

| தேர்ச்சி | Nதர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 5.0 அளவிடல் தேவைகளுக்காக உரிய நுட்பமுறைகளைக் கைக்கொள்வார். | 5.1 பொருத்தமான உபகரணங்களைப் பயன்படுத்தி சிறிய அளவீடுகளைப் பெறுவார். | • வேர்ணியர் இடுக்கி<br>• நுண்மாணி திருகுக்கணிச்சி<br>• நகரும் நுணுக்குக் காட்டி<br>• முத்துலாத் தராசு<br>• இலத்திரனியல் தராசு | • அளவீட்டு உபகரணங்களின் இழிவெண்ணிக்கையைத் துணிவார்.<br>• உபகரணங்களிலிருந்து அளவீட்டைப் பெறும்போது உரிய நடைமுறைகளைக் கைக்கொள்வார்.<br>• உபகரணங்களில் பூச்சிய வழுவை துணிந்து அளவீடுகளைச் செம்மையாக்குவார்.<br>• பின்னவழுவை அறிமுகஞ் செய்து சிறிய அளவீடுகளை மிகச் செம்மையாக பெறுவதன் அவசியத்தை எடுத்துக் காட்டுவார்.<br>• சதவீத வழுவைக் கணிப்பார்.<br>• சிறிய அளவீடுகளைப் பெறும்போது அதற்குப் பொருத்தமான உபகரணங்களின் பயன்பாட்டை மதிப்பார். | 08 |
| 6.0 வெப்ப இரசாயனவியல் தொடர்பான அடிப்படை எண்ணக்கருக்களை ஆய்ந்தறிவார். | 6.1 பௌதிக மாற்றங்களுடன் தொடர்பான வெப்ப மாற்றங்களைச் சோதிப்பதற்கு வெப்ப இரசாயனவியலின் அடிப்படை எண்ணக்கருக்களைப் பயன்படுத்துவார். | • வெப்ப இரசாயனவியலுடன் தொடர்பான அடிப்படை எண்ணக்கருக்கள்<br>  • வெப்பம், வேலை, சக்தி<br>  • தொகுதி, சூழல் (சுற்றுப்புற), எல்லை<br>• நிலை மாற்றம்<br>  • உருகுதல்<br>  • உறைதல்<br>  • பதங்கமாதல்<br>  • மீள் பதங்கமாதல்<br>  • ஆவியாதல்<br>  • ஒடுங்குதல் | • வெப்பம், வேலை, சக்தி, தொகுதி, எல்லை, அயற்சூழல் ஆகிய பதங்களை வரையறுப்பார்.<br>• எல்லையூடாக சக்தியும் சடப்பொருளும் வேலையும் பரிமாறப்படும் தொகுதியை திறந்த தொகுதி என அறிமுகஞ்செய்வார்.<br>• எல்லையூடாக சக்தியும் வேலையும் பரிமாறப்படும் தொகுதியை மூடிய தொகுதி என அறிமுகஞ்செய்வார். (எல்லை, சடப்பொருள் பரிமாற்றத்துக்கு அனுமதிக்காது)<br>• எல்லையூடாக சக்தியும் சடப்பொருளும் வேலையும் பரிமாறப்படாத தொகுதி தனிமையாக்கப்பட்ட தொகுதி என இனங்காண்பார். | 05 |

| தேர்ச்சி | Nதர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 6.2 தாக்க வெப்பத்தைப் பரிசோதனை ரீதியாகத் தீர்மானிப்பார். | • தாக்க வெப்பம்<br>• அகவெப்ப, புறவெப்பத் தாக்கங்கள்<br>• சக்தி வரைபுகள்<br>• தாக்க வெப்பத்தின் பிரயோகங்கள் | • தொகுதி, சூழல் ஆகியன ஒருங்கே அகிலம் ஆகும் எனக்குறிப்பிடுவார்.<br>• உருகல், உறைதல், பதங்கமாதல், படிதல், ஆவியாதல், ஒடுங்குதல் ஆகிய பௌதிக மாற்றங்களை வரையறுப்பார்.<br>• நிலைமாற்றம் பற்றிய மூலக்கூற்று மட்ட விளக்கத்தை மேற்கொள்வார்.<br><br>• தாக்க வெப்பம் என்பதை விவரிப்பார்.<br>• புறவெப்ப, அக வெப்பத் தாக்கங்களை உதாரணங்களின் உதவியுடன் விளக்குவார்.<br>• புறவெப்ப, அகவெப்ப தாக்கங்களைச் செய்துகாட்டுவார்.<br>• அமில - மூல தாக்கத்தின் தாக்க வெப்பத்தை பரிசோதனைரீதியாக கணிப்பார்.<br>• தாக்கங்கள் சார்ந்த வெப்பமாற்றங்களை தீர்மானிக்கும்போது மேற்கொள்ளப்படும் எடுகோள்களைக் கூறுவார்.<br>• தாக்கங்கள் சார்ந்த வெப்ப மாற்றங்களை சக்தி வரைபடத்தில் குறித்துக் காட்டுவார்.<br>• தாக்க வெப்பத்தின் பிரயோகங்களை உதாரணங்கள் மூலமாக விவரிப்பார்.<br>• தாக்க வெப்பம் தொடர்பான கற்கை அன்றாட வாழ்விலும் வேலை உலகிலும் பயன்படுகிறது என ஏற்றுக்கொள்வார். | 07 |

| தேர்ச்சி | Nதர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 7.0 கணினி முறைமையொன்றினதும் அதன் துணையுறுப்புக்களினதும் வினைத்திறனான பயன்களை தேடியறிவார். | 7.1 கணினியை அறிமுகஞ்செய்து உள்ளீட்டு மற்றும் வருவிளைவு உத்திகளை விவரிப்பார். | • கணினியின் அறிமுகம்<br>• கணினி ஒரு முறைமையாக<br>  • உள்ளீடு<br>  • செய்முறை<br>  • வருவிளைவு<br>• தனியாள் கணினியின் அடிப்படைக் கூறுகள்<br>  • காட்சித்திரை<br>    • காட்சித்திரை வகைகள் CRT, LCD, LED<br>  • முறைமை அலகு (System Unit)<br>    • தாய்ப்பலகை, செயலி<br>      • தற்போக்கு பெறுவழி நினைவகம் (RAM)<br>      • வாசிப்பு மட்டும் நினைவகம் (ROM)<br>      • வன் வட்டு<br>      • விரிவட்டைகள், வலுவலகு<br>    • விசைப்பலகை (வித்தியாசமான வகைகள்)<br>    • சுட்டும் கருவிகள் ( Pointing devices)<br>      • சுட்டி<br>      • சுவட்டுப் பந்து (Track ball)<br>      • தொடுகைச் சாளரம்(Touch panel)<br>    • ஏனைய உள்ளீட்டு வருவிளைவு உத்திகள்<br>  • வருவிளைவுச் சாதனங்கள்<br>    • அச்சுப்பொறி, வரைவுப்பொறி, ஒலிபெருக்கி, காட்சித்திரை<br>  • சேமிப்புக் கருவிகள் (Storage devices)<br>    • சேமிப்பு ஊடகம் | • கணினியை ஒரு முறைமை என விவரிப்பார்.<br>• வன்பொருள்களை, உள்ளீடு, வருவிளைவு, மற்றும் செய்முறை அலகாக வகைப்படுத்துவார்.<br>• பயனரின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் உத்திகளைத் தெரிவுசெய்வார்.<br>• கணினியொன்றில் ஏற்படும் பொதுவான கோளாறுகளைச் சரிப்படுத்துவார்.<br>• கணினிகளை, அளவு மற்றும் செயல்வல்லமை ஆகியவற்றின் அடிப்படையில் வகைப்படுத்துவார். | 03 |

| தேர்ச்சி | Nதர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 8.0 கணினிப் பணிசெயல் முறைமையை பயன்தரு விதத்தில் பயன்படுத்துவார். | 8.1 கணினி பணிசெயல் முறைமையை அறிமுகஞ் செய்து அதன் தொழில்களை விவரிப்பார். | • காந்தவியல்<br>• ஒளியியல் (Optical)<br>• வேறு<br>• உள்ளீட்டுச் சாதனங்கள்<br>• வருடி, நுணுக்குப்பன்னி, பட்டைக் குறிமுறை வாசிப்பான்<br>• கணினி வகைகள்<br>• நுண்கணினி<br>• மடிக்கணினி (Laptop)<br>• மேசைக்கணினி (Desktop)<br>• உள்ளங்கைக் கணினி (Palmtop)<br>• குறிப்புப் புத்தகக் கணினி (Notebook)<br><br>• பணிசெயல் முறைமையின் இன்றியாமை<br>• தொடங்குதல் செயன்முறை (Booting Process)<br>• வரைவியல் பயனர் இடைமுகம் (GUI -Graphical User Interface)<br>• கட்டளைக் கோட்டு இடைமுகம் (Command line interface)<br>• பல்வேறு பணிசெயல் முறைமைகள் (Windows, Linux, MacOS, DOS)<br>• திறந்த வகை பணிசெயல் முறைமைகள் Linux, Ubuntu, Fedora, Hanthana, Unix<br>• பணிசெயல் முறைமையின் இயல்புகள் (Characteristics)<br>• நினைவக முகாமை<br>• உபாயமுறை முகாமை<br>• கோப்பு முகாமை | • பணிசெயல் முறைமை தொழிற்படும் விதத்தையும் அதனைப்பயன்படுத்தும் விதத்தையும் விவரிப்பார்.<br>• கணினியின் பல்வேறு கூறுகளைப் பெயரிட்டு அவை பணிசெயல் முறைமையுடன் இடைவினையடையும் விதத்தை விளக்குவார்.<br>• பல்வேறு வகைப்பட்ட பணிசெயல் முறைமைகளை விவரித்து பிரதானமாக பயன்படுத்தப்படும் பணிசெயல் முறைமைகளைப் பெயரிடுவார்.<br>• பணிசெயல் முறைமை, பிரதான நினைவகத்துடன் இடைவினையடையும் விதத்தை விவரிப்பார்.<br>• கோப்பு முறைமைகள் அவற்றின் தொழிற்பாடுகள் ஆகியவற்றை விவரிப்பார். | 03 |

| தேர்ச்சி | Nதர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | • பரிசீலனை முகாமை<br>• பாதுகாப்பு முகாமை<br>• முறைமை முகாமை<br>• முறைமைத் தொழிற்பாட்டு அடைவு முகாமை<br>• தவறுகளை எடுத்துக்காட்டல்<br>• ஏனைய மென்பொருட்களுக்கும் பயனருக்கும் இடையிலான தொடர்பை ஏற்படுத்தல். | • கணினி மற்றும் அதன் துணைகூறுகளின் விவரக்கூறுகளை இனங்காண்பார்.<br>• தவறு முகாமையை விளக்குவார். | |
| | 8.2 கணினிப் பணிசெயல் முறைமையைப் பயன்படுத்துவார். | • பணிசெயல் முறைமைகளை இனங்காணல்<br>• கோப்புக்களின் முகாமைத்துவம்<br>• பணிசெயல் முறைமையுடன் வன்பொருட்களை இணைத்தல் | • பணிசெயல் முறைமையின் பாகங்களை இனங்காண்பார்.(Desktop, Explorer, Controls)<br>• உறைகள்(Folder), உப உறைகளை (sub folder) உருவாக்குவார்.<br>• செலுத்தி (Drive) உறை, உப உறை ஆகியவற்றை இனங்காண்பார்.<br>• கோப்புக்களின் பாகங்களை இனங்காண்பார்.<br>• Explorer / Nautilus ஊடாக உறை மாதிரியை அவதானிப்பார்/ மாற்றியமைப்பார்.<br>• செலுத்தி, கோப்பு, உறை, ஆகியவற்றை கட்டளைக் கோட்டைப் (Command Line) பயன்படுத்தி இனங்காண்பார்.<br>• USB Mouse, Pen Drive, Printer, HSDPA dongle போன்றன கணினியுடன் இணைக்கும் சந்தர்ப்பத்தில் பணிசெயல் முறைமையின் நடத்தையை அவதானிப்பார்.<br>• Controls ஐப் பயன்படுத்தி செய்பணி முறைமையின் வெவ்வேறு பாகங்கள் தொடர்பாகத் தேடியறிவார்.<br>• சுட்டி (Mouse) | 04 |

| தேர்ச்சி | Nதர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | | • ஒலி (Sound)<br>• Personalization<br>• திகதியும் நேரமும் (Date & Time)<br>• Folder Option<br>• பேச்சை இனங்காணல் (Speech Rec -ognition)<br>• பயனர் கணக்குகள் (User Accounts)<br>• Task Manager பயன்படுத்தி Linux இல் ps - A ஐப் பயன்படுத்தி செய்பணி முறைமையின் செய்பணிகளைப் (Process) பற்றித் தேடியறியவும், செய்பணிகளை நிறுத்திவைக்கவும் முடியும் என்பதை இனங்காண்பார். | |
| 9.0 நாளாந்த வாழ்க்கைத் தேவைகளுக்காக திரிகோண கணித விகிதங்களைப் பயன்படுத்தி கருமங்களை இலகுபடுத்திக் கொள்வார். | 9.1 திரிகோணகணித விகிதங்களை விவரிப்பார். | • கோண அளவீடுகளான, பாகை, ஆரையன் ஆகியவற்றின் அறிமுகம்.<br>• சைன், கோசைன், தாஞ்சன் ஆகிய திரிகோண கணித விகிதங்களின் அறிமுகம்.<br>• $0, \frac{\pi}{6}, \frac{\pi}{4}, \frac{\pi}{3}, \frac{\pi}{2}$ ஆகிய கோணங்களின் திரிகோண கணித விகிதங்கள் (sin, cos, tan) | • கோண அளவீடுகளாக பாகை, ஆரையன் ஆகியவற்றை இனங்காண்பார்.<br>• சைன், கோசைன், தாஞ்சன் ஆகிய திரிகோணகணித விகிதங்களை விளக்குவார்.<br>• திரிகோணகணித விகிதங்களைப் பயன்படுத்திப் பிரசினம் தீர்ப்பார். | 07 |
| | 9.2 திரிகோண கணித விகிதங்களைப் பயன்படுத்துவார். | • திரிகோண கணித விகிதங்களைப் பயன்படுத்தி முக்கோணியொன்றின் பக்கங்களையும் கோணங்களையும் துணிதல்.<br>• $S=\frac{1}{2}ab\sin C$ சூத்திரத்தைப் பயன்படுத்தி முக்கோணியொன்றின் பரப்பளவைத் துணிதல் | • நடைமுறைச் சந்தர்ப்பங்களின்போது, ஏற்றக் கோணம், இறக்கக் கோணம் ஆகியன கிடைக்கும் விதம் தொடர்பாகக் கவனஞ் செலுத்துவார்.<br>• செங்கோண முக்கோணிகள் சார்ந்த நீளங்கள், கோணங்களைக் காண்பதற்காக திரிகோண கணித விகிதங்களைப் பயன்படுத்துவார். | 06 |

| தேர்ச்சி | Nதர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 9.3 வில்லொன்றின் நீளத்தையும் ஆரைச்சிறையின் பரப்பளவையும் காண்பார். | • வில்லொன்றின் நீளம்<br>• ஆரைச்சிறையின் பரப்பளவு | (நடைமுறைச் சந்தர்ப்பங்கள் உட்பட)<br>• முக்கோணியொன்றின் நியமன் குறிப்பீட்டைப் பயன்படுத்தி, முக்கோணியொன்றின் பரப்பளவுக்காக, $S = \frac{1}{2}ab \sin C$ சூத்திரத்தைப் பெறும் விதத்தை விவரிப்பார்.<br>• அச்சூத்திரத்தைப் பயன்படுத்தி, முக்கோணியொன்றின் பரப்பளவைத் துணிவார். (நடைமுறைச் சந்தர்ப்பங்கள் உட்பட)<br>• வில்லொன்றின் நீளத்தைக் காண்பதற்காக $l = r\theta$ சூத்திரத்தை இனங்காண்பார்.<br>• $l = r\theta$ எனும் சூத்திரத்தைப் பயன்படுத்தி வில்லொன்றின் நீளத்தைக் கணிப்பார்.<br>• ஆரைச்சிறையொன்றின் பரப்பளவைப் பின்வரும் சூத்திரங்கள் மூலம் கணிப்பார்.<br>$S = \frac{1}{2}r^2\theta$ ($\theta$ ஆரையன்களில் அளக்கப்பட்டுள்ளது)<br>$S = \frac{\theta}{2\pi}A$ ($\theta$ ஆரையன்களில் அளக்கப்பட்டுள்ளது)<br>இங்கு A என்பது ஆரைச்சிறை பெறப்பட்ட தொடக்க வட்டத்தின் பரப்பளவாகும்.<br>$S = \frac{\alpha^0}{360^0}A$ ($\alpha$ பாகைகளில் அளக்கப்பட்டுள்ளது)<br>$\alpha$ என்பது பாகைகளில் அளக்கப்பட்டுள்ள மையத்தின் எதிரமைக்கும் கோணமாகும்.<br>• முக்கோணியொன்றின் பரப்பளவைக் காண்பதற்காக $S = \frac{1}{2}ab \sin C$ சூத்திரத்தைப் பயன்படுத்துவார்.<br>• கூட்டுத்தளவுருவங்கள் சார்ந்த பிரசினங்களைத் தீர்ப்பதற்காக மேற்படி சூத்திரங்களைப் பயன்படுத்துவார். | 08 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 10.0வெப்பம் தொடர்பான அறிவை, நாளாந்தக் கருமங்களுக்காகவும் விஞ்ஞானபூர்வக் கருமங்களுக்காகவும் பயன்படுத்துவார். | 10.1 திண்ம, திரவ விரிவுகள் பற்றி ஆராய்வார். | • வெப்பம்<br>• விரிவு<br>• திண்மங்களில் நீட்டல் விரிவும் பரப்பளவு விரிவும், கனவளவு விரிவும்<br>• திரவ விரிவு | • திண்ம மற்றும் திரவ விரிவு, விரிதகவு, வெப்பநிலை ஆகியவற்றுக் கிடையிலான தொடர்பை முன்வைப்பார்.<br>• வெப்ப விரிவு பயன்படும் சந்தர்ப்பங்களை விவரித்து கணித்தல்களைச் செய்வார். | 05 |
| | 10.2 வெப்பப் பரிமாற்றம், நிலைமாற்றம் ஆகியன தொடர்பாகத் தேடியாய்வார். | • வெப்பப் பரிமாற்றம்<br>• வெப்பக் கொள்ளளவு<br>• தன்வெப்பக் கொள்ளளவு | • வெப்ப பரிமாற்றம் தொடர்பான கணித்தல்களைச் செய்வார்.<br>• நிலைமாற்றமொன்றின்போது உறிஞ்சப்படும் வெப்பம் அல்லது வெளிவிடப்படும் வெப்பத்தைக் கணிப்பார். | 05 |
